1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை வருகிற 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 232. திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

232—

தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவித் திட்டம்,

*5261 திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

படித்தவர்களுக்கும் கிராமப் பகுதியில் வாழ்பவர்களுக்கும் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவி அளித்திட அரசிடம் திட்டங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987-88 முதல் அமுல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் துவங்குவதற்காக இத்துறையால் அதிகபட்சம் ரூபாய் 2,000 அல்லது வங்கி—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

யால் அளிக்கப்பட உள்ள கடன் தொகையில் கால்பங்கு இதில் எது குறைவோ இத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இம் மானியத்தின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூபாய் 10,000 வரை கடனாகப் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட அளவில் இத்துறை அலுவலர், வங்கி அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஆகியவர்களைக் கொண்ட ஒரு தேர்வுக் குழு உள்ளது. இத்திட்டம், இம்மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களால் அமுல்படுத்தப்படு கிறது. இத்திட்டத்தின்கீழ் செப்டம்பர் 1991 வரை 458 விண்ணப் பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூபாய் 7.88 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு ரூபாய் 35.96 இலட்சம் மொத்தக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கடனுதவி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும், மானியக்தொகை மாநில அரசு நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

பயிற்சிப் பிரிவில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 47 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 253 என்.சி.வி.டி. அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் எஸ்.சி.வி.டி., அங்கீகாரம் பெற்ற 175 தனியார் தொழில் பள்ளிகளும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. 45 தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வருடத்திற்கு சுமார் 20,000 நபர்கள் பயிற்சி முடித்து வெளி வருகின்றார்கள்.

மேற்கண்ட பயிற்சி தவிர, டிரைசம், தாட்கோ, நேரு ரோஜர் யோஜனா போன்ற பகுதி நேர பயிற்சிகளும் இத்துறை யில் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் வருமாறு :

<u>டிரைசம்</u> :

இத்திட்டத்தின் கீழ் 32 தொழிற்பயிற்சி நிலையங்களில் பகுதி நேர பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தது. 9 தொழிற் பயிற்சி நிலையங்களில் முழு நேர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. செப்டம்பர் 1979-இல் இப்பயிற்சி துவங்கப்பட்டு 31—3—1991 வரை 22,168 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இப்பயிற்சி 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை நடத்தப்படுகிறது. இந்தப் பயிற்சிக்காக நிதி ஊரக வளர்ச்சித் துறையினரால் ஒதுக்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 250 வரை உதவித்தொகை மாவட்ட திட்ட அலுவலர்களால் அளிக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1992 மார்ச் 16]

பயிற்சி முடிந்தவுடன் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் மாவட்ட திட்ட அலுவலர்களால் சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பதற்காக ரூபாய் 500 பெறுமான கருவிப் பெட்டி வழங்கப்படுகின்றது.

தாட்கோ :

இது நகர்ப்புற ஆதி திராவிட இளைஞர்களுக்கென அளிக்கப்படும் பகுதி நேர பயிற்சி. இதன் பயிற்சிக்காலம் 6 மாதம். இப்பயிற்சிக்கென நிதி ஒதுக்கீடு தாட்கோ நிறுவனத்தால் அளிக்கப்படுகிறது. 1985-லிருந்து அளிக்கப்பட்டு வரும் இப்பயிற்சியில் இதுவரை 2,661 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாத உதவித் தொகை ரூபாய் 250 ஆகும்.

நேரு வேலைவாய்ப்புத் திட்டம் :

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற ஏழை பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பகுதி நேர பயிற்சிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செப்டம்பர் 1990 முதல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 568 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாதந்தோறும் ரூபாய் 250 வரை உதவித்தொகை நகராட்சி ஆணையர்களால் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் பயிற்சி மட்டுமே இத்துறையின் பயிற்சிப் பிரிவில் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு சுய தொழில் துவங்க நிதி உதவிகள் ஊரக வளர்ச்சித் துறையில் மாவட்ட திட்ட அலுவலர்களால் நேரிடையாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் துறையில் குறுகிய கால தொழில் முனைவோர் பயிற்சி வங்கி மற்றும் பல நிறுவனங்களின் உதவியுடன் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில்களுக்கு கடன் வழங்குகிறது.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்க அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்த விவர அறிக்கையில் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றி அதற்கு ஒரு வரம்பிற்குட்பட்ட கடனை வழங்கி இருப்பதாக அந்த

அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது. மேற்படி அந்தத் திட்டத்தை கிராமப் பகுதியிலே படித்திருக்கின்ற இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் இவர்கள் எல்லாம் அரசுக்கு விண்ணப்பம் போட்டு வேலை தேடி அலைகின்ற இந்த இளைஞர்களுக்கு ஒருங்கிணைந்த கிராமப் பகுதியிலே எல்லாம் பயிற்சி அளித்து அவர்களுக்கு கடன் உதவி வழங்குகின்ற அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, அவர்களுக்கு வழங்குகின்ற அந்தக் கடனை அதிகப்படுத்தித் தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987-88 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சமாக 10,000 ரூபாய் தான் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது மாவட்ட தொழில் மையங்களில் சுய வேலைவாய்ப்பு திட்டங்களில் 35,000 ரூபாய் கடன் வழங்கப்படுவதாலும் எனவே இதிலே குறைவான மனுக்கள் வருகின்ற காரணத்தினாலே இந்த 6 மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் இருப்பவர்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் பெற்று வருகின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணுவியல் துறையில் பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களில் குடிசைத் தொழிலாக டிரான்ஸிஸ்டர் அசெம்பிளிங் அமைக்க அரசு கடன் உதவி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களின் மூலமாக இதற்கு கடன் உதவி கேட்டு மனு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 233. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

233—

விளவங்கோடு தாலுக்காவிலுள்ள விவசாயிகளுக்கு நிதியுதவி.

*521 திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: